**<u>IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR</u>**

**SC.No. 260/2023**

**Deposition of: PW - 3 (LW - 5 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** ஆனந்தகுமார் | **Father Name** | **:** |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Nationality** | **:** | **Age** | **:** |
| **Calling** | **:** | | |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 11.03.2024 at 11.30 a.m to 12.00 p.m.**

எதிரிகள் இருவரும் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>**:**

1) நான் மும்முடி, தியாகனூர் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 22.08.2020 அன்று எரிசாராயம் கடத்தல் சம்மந்தமாக எதிரிகளை பிடித்து வைத்து இருப்பதாக காவல் துறையினர் எனக்கு போன் செய்தார்கள். நானும் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது ஆஜர் எதிரியான சந்திரசேகர் என்பவரை அவருடைய ஆம்னி வேனுடன் சுமார் 600 பாட்டில்கள் வீதம் பிடிக்கப்பட்டதாக காவல் துறையினர் சொன்னார்கள். நாங்களும் அதை பார்த்துவிட்டு மகஜரில் கையொப்பம் செய்தோம்.

2) பிறகு அவர் சொன்ன வீட்டிற்கு சென்றோம். அங்கு ஒரு சில்வர் நிற கிரே ஆம்னி காரில் சுமார் 288 பாட்டில்கள் இருந்தது. மேலும் கூரை வீட்டில் காலி பாட்டில்கள், லேபிள்கள், மெஷின், வெள்ளை நிற எரிசாராய கேன், ஆகியவற்றை காவல் துறையினர் கைப்பற்றினார்கள். நானும் உடன் இருந்தேன். நான் கையொப்பம் செய்த 3 மகஜர்களில் உள்ள முதல் கையொப்பம் தான் அதசாஆ.1 முதல் அதசாஆ 3 ஆகும்.

3) பிறகு ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகளிடம் இருந்து பெறப்பட்டது. நான் அதில் கையொப்பம் செய்தேன். அது அதசாஆ.4 ஆகும். அதே போல் இரண்டு பார்வை மகஜர்களிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். அது அதசாஆ**.5** மற்றும்

அதசாஆ**.6** ஆகும். காவல் துறையினர் விசாரித்தார்கள்.

**எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணை**

**4)** காலை 05.15 மணிக்கு நான் ஆத்தூரில் இருந்த போது தான் காவல் துறையினர் போன் செய்தார்கள். சுமார் 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். ஆத்தூரில் இருந்து சம்பவ இடம் சுமார் 15 கி.மீ இருக்கும் என்றால் இல்லை 10 கி.மீ க்குள் இருக்கும். மேற்படி 2 ம் எதிரி திருவேங்கடம் பிடிக்கப்பட்ட காரில் எந்த இடத்தில் அமர்ந்திருந்தார் என்றால் கும்பலாக இருந்ததால் குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியவில்லை. காவல் துறையினர் எந்த வாகனத்தில் வந்திருந்தார்கள் என எனக்கு தெரியாது.

5) காவல் துறையினர் சாதாரண உடையில் தான் இருந்தார்கள். மேற்படி நான் சம்பவ இடம் செல்ல என் அதிகாரிகளிடம் முன் அனுமதி பெற்றேனா என்றால் அது நான் பணி செய்து வரும் கிராமம் என்பதால் அனுமதி பெறவில்லை. என்னுடைய பணி சம்மந்தமாக Moving Register பராமரிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அந்த பதிவேட்டின் நகலை நான் காவல் துறையினரிடம் கொடுக்கவில்லை. நான் சம்பவ இடம் சென்ற போது பொது மக்கள் சுமார் 50 பேர் இருந்திருப்பார்கள். காவல் துறையினர் எதிரிகளை என் முன்பாக பிடிக்கவில்லை.

6) மேற்படி காவலர்கள் சீருடையில் இல்லாமல் இருந்ததால் யார் யார் என்ன என்ன பணி பதவியில் இருந்தார்கள் என எனக்கு தெரியாது. நான் சுமார் 10-20 வழக்குகளில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை யார் எழுதினார்கள் என எனக்கு தெரியாது. மேற்படி காவல் துறையினர் எண்ணி வைத்த பாட்டில்களை தான் நான் இவ்வளவு என சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானே தனிப்பட்ட முறையில் எண்ணினேன். மேற்படி மாதிரி வரைபடம் இரண்டு, இரண்டு பார்வை மகஜரிலும் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் குறிப்பிடப்பட்டு இருந்தது.

7) பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்திலும் கார் இருந்ததாகவும், பாட்டில்கள் இருந்ததாகவும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சென்ற சமயத்தில் வெளிச்சம் இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. கொஞ்சம் வெளிச்சம்

இருந்தது. மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை யார் திருத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதே போல் 2 வது மாதிரி வரைபடத்திலும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை யார் திருத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது.

8) இரண்டாவதாக தயாரிக்கப்பட்ட பார்வை மகஜரில் மாருதி ஆம்னி வேண் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற எந்த பொருளும் இருப்பதாக குறிப்புகள் இல்லை. மேலும் அதில் எதிரி வீடு எங்கும் சொல்லப்படவில்லை. இரண்டாவதாக தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதை யார் திருத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதிக எண்ணிக்கையில் இருந்தது என்பதை நான் எண்ணி பார்க்கவில்லை. எந்த வீட்டில் வைத்து ஆவணங்களை காவல் துறையின்ர எழுதினார்கள் என தற்போது ஞாபகம் இல்லை. அந்த வீடுகளுக்கு வாசல் எந்த பக்கம் என ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும் அதனால் தான் வாசல் கூட தெரியவில்லை என்றால் சரியல்ல.

9) வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்று பொருளுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் அவை காவல் துறையினரால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் அணைத்து ஆவணங்களிலுமே காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக போடப்பட்ட வழககில் யாரும் சாட்சியம் அளிக்க வராததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Assistant Sessions Judge,**
**Attur.**